St.John's Tamil CSI Church, Kuwait Main, Abbasiya Branch & Jahra
தூய யோவான் தமிழ் சி.எஸ்.ஐ. ஆலயம், குவைத் மெயின், அப்பாசியா கிளை & ஜஹறா


# எக்காளம்
# TRUMPET

எக்காளம்-24 | மார்ச் 2023 | தொனி-03



# மடலின் உள்ளே ...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| தியான கருப்பொருள்கள் | 5 |
| திருச்சபை நிகழ்வுகள் | 7 |
| *Vision'22 Updates* | 9 |
| கவிதைப் பகுதி | 10 |
| என்னை உயிர்ப்பியும் | 11 |
| *Birthdays & Wedding Anniversaries* | 18 |
| வேதாகம வினா-விடை | 21 |
| *Kids Corner* | 23 |



# ஆயர் மடல்

அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் தூய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்..

மார்ச் மாத மடலின் வழியாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 2023-ம் ஆண்டின் இரண்டு மாதங்களை நிறைவு செய்து மூன்றாம் மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இரண்டு மாதங்களிலும் ஆண்டவர் நமக்கு தந்த எல்லா ஆற்றலுக்காகவும் அனுகூலங்களுக்காகவும் ஆண்டவரை போற்றுகிறேன். புதிய மாதம் ஆசீர்வாதத்தின் மாதமாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக...

மாற்கு 1:15-ல் காலம் நிறைவேறி விட்டது. இறையரசு நெருங்கி விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்றார் இயேசு. மானிட வாழ்வில் மனம் மாறி நற்செய்தியை நம்பும் ஓர் காலத்தில் நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஆண்டின் தவக்காலம் மன மாற்றத்திற்கான அழைப்பினை கொடுக்கின்றது. 40 நாட்கள் வாழ்வின் வசந்த காலத்தினை நாம் பெற்றுக் கொள்ள நமக்கு தரப்பட்டிருக்கின்ற காலம் ஆகும்.

நாம் நம்மை சுய ஆய்வு செய்து இறைக் கரங்களில் நம் வாழ்வை கையளிக்கும் படியான ஓர் அழைப்பினைத் தருகிறது. இக்காலத்தினை சிறப்பாக பயன்படுத்துவது நல்லது.

இந்நாட்களில் உபவாசமிருந்து ஜெபிப்பதும், தேவையில் இருப்பவருக்கு உதவி செய்வதும் சிறப்பிற்குரிய ஒன்று ஆகும்.

இத் தவக்காலத்தில் நாம் செய்த தவறுகட்காக **"மனம் வருந்த வேண்டும்"**. உதாரணமாக, தாவீது தான் செய்த தவறுக்காக மனம் வருந்தினார். "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்" என்றால், மனம் வருந்தினார். நம் வாழ்விலும் மனம் வருந்துதல் வேண்டும். மனம் வருந்துவதோடு நின்று விடாமல் **"மனம் திருந்த வேண்டும்"** பேதுரு ஆண்டவரை மறுதலித்தார். செய்தது தவறு என்று மனம் வருந்தி, மனம் திருந்திய ஓர் அனுபவத்தினையும் பெற்றுக் கொண்டார். மனம் திருந்தியதோடு நின்று விடாமல் **"மனம் பொருந்த வேண்டும்"**. நாம் நம்மோடும், பிறரோடும் மனம் பொருந்துகின்ற மக்களாக காணப்பட வேண்டும்.

இத் தவக்காலங்களில் மனம் வருந்தி, மனம் திருந்தி, மனம் பொருந்தி வாழ்வோம். தவக்காலம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையட்டும். இறையாசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. ஆமென்.

என்றும் உங்களுடன்
சபை ஆயர்

**அருள்திரு. A. ஜெபதாஸ்**

## Promise Verse - 2023

**Rejoicing in hope; patient in tribulation; continuing instant in prayer; (Romans 12:12)**



# தியான கருப்பொருள்கள்

| DATE | TOPIC | BIBLE READINGS |
|---|---|---|
| 02.03.2023-04.03.2023 | **"The Forgiving Christ"**<br>**5th Sunday Before Easter** | 1st - Genesis 4: 8- 16<br>2nd - Romans 5: 6-11<br>Psalm 25<br>Gospel - Mark 2: 1– 12 |
| 09.03.2023-11.03.2023 | **"The Accepting Christ"**<br>**4th Sunday Before Easter** | 1st - Hosea 2: 14-23<br>2nd - Philo 1-21<br>Psalm 87<br>Gospel - Mathew 15 : 21- 28 |
| 16.03.2023-18.03.2023 | **"The Liberating Christ"**<br>**3rd Sunday Before Easter** | 1st - Exod. 3: 1-13<br>2nd - Gal 5: 1-12<br>Psalm 82<br>Gospel - Luke 13: 10- 17 |
| 23.03.2023-25.03.2023 | **"Cross and the Restoring Christ"**<br>**Passion Sunday** | 1st - Job 42: 10 – 17<br>2nd - Eph. 2: 1-10<br>Psalm 126<br>Gospel - Mark 10: 46 – 52 |
| 30.03.2023-01.04.2023 | **"Christ: The King of Peace"**<br>**Palm Sunday** | 1st - Zech 9: 1-12<br>2nd - Eph. 2: 11 – 22<br>Psalm 24 |

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12)**



# Lent: a Season of Prayer

A DAILY BIBLE READING PLAN FOR THE LENTEN SEASON

- ☐ DAY 1: MATTHEW 6:5-13
- ☐ DAY 2: LUKE 1:46-55
- ☐ DAY 3: PHILIPPIANS 2:1-11
- ☐ DAY 4: PSALM 46
- ☐ DAY 5: JOHN 15:1-11
- ☐ DAY 6: LUKE 5:29-32
- ☐ DAY 7: 1 JOHN 5:14-15
- ☐ DAY 8: 1 KINGS 3:5-14
- ☐ DAY 9: HEBREWS 4:14-16
- ☐ DAY 10: PSALM 98
- ☐ DAY 11: ROMANS 12:9-21
- ☐ DAY 12: PSALM 51:1-12
- ☐ DAY 13: 2 CHRONICLES 7:12-16
- ☐ DAY 14: EPHESIANS 1:16-23
- ☐ DAY 15: JAMES 1:12-13, 16-17
- ☐ DAY 16: PSALM 27
- ☐ DAY 17: 1 CORINTHIANS 13
- ☐ DAY 18: 1 JOHN 1:5-10
- ☐ DAY 19: LUKE 18:9-14
- ☐ DAY 20: PHILIPPIANS 1:3-11
- ☐ DAY 21: JEREMIAH 10:12-13
- ☐ DAY 22: PSALM 103:1-14
- ☐ DAY 23: JAMES 1:19-26
- ☐ DAY 24: PSALM 25
- ☐ DAY 25: MATTHEW 7:7-11
- ☐ DAY 26: 2 KINGS 20:1-6
- ☐ DAY 27: EPHESIANS 2:4-7
- ☐ DAY 28: PSALM 1
- ☐ DAY 29: EPHESIANS 6:10-20
- ☐ DAY 30: LUKE 15:11-24
- ☐ DAY 31: JAMES 5:13-18
- ☐ DAY 32: LUKE 22:39-44
- ☐ DAY 33: ISAIAH 40:12-15, 28-31
- ☐ DAY 34: PSALM 36
- ☐ DAY 35: MATTHEW 6:25-34
- ☐ DAY 36: JEREMIAH 31:17-19
- ☐ DAY 37: PHILIPPIANS 4:4-8
- ☐ DAY 38: JOHN 17
- ☐ DAY 39: TITUS 3:4-7
- ☐ DAY 40: PSALM 146

Promise Verse - 2023

Rejoicing in hope; patient in tribulation; continuing instant in prayer; (Romans 12:12)

# திருச்சபை நிகழ்வுகள்

| தேதி | நேரம் | ஆராதனை | இடம் |
|---|---|---|---|
| 01-03-23 (புதன்) | காலை 5:15 | அருணோதய ஆராதனை பரிசுத்த நற்கருணை ஆராதனை | திவானியா ஹால், NECK வளாகம், குவைத் சிட்டி |
| 02-03-23 (வியா) | மாலை 7:00 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| 03-03-23 (வெள்) | காலை 10:00 | உபவாச ஜெபக்கூடுகை | Parish Hall (Better Books), சால்மியா |
| | மாலை 3:30 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | ஜஹ்ரா ஜெப அறை |
| 04-03-23 (சனி) | மாலை 7:00 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | நார்த் டெண்ட் NECK வளாகம், குவைத் சிட்டி |
| 09-03-23 (வியா) | மாலை 7:00 | துதி ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| 10-03-23 (வெள்) | மாலை 3:30 | துதி ஆராதனை | ஜஹ்ரா ஜெப அறை |
| | மாலை 7:00 | கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் (CEF) | Parish Hall (Better Books), சால்மியா |
| 11-03-23 (சனி) | மாலை 7:00 | துதி ஆராதனை | நார்த் டெண்ட் NECK வளாகம், குவைத் சிட்டி |
| 13-03-23 (திங்) | மாலை 7:00 | பெண்கள் ஐக்கிய சங்கம் (அப்பாசியா) | St. John's Parish Hall, அப்பாசியா |
| 16-03-23 (வியா) | மாலை 7:00 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| | இரவு 10:30 | நள்ளிரவு ஜெபக்கூடுகை | Hall of Love, NECK வளாகம், குவைத் சிட்டி |
| 17-03-23 (வெள்) | மாலை 3:30 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | ஜஹ்ரா ஜெப அறை |
| | மாலை 7:00 | பெண்கள் ஐக்கிய சங்கம் (சிட்டி மெயின்) | Parish Hall (Better Books), சால்மியா |

**வாக்குத்தத்த வசனம் – 2023**


**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12)**

# திருச்சபை நிகழ்வுகள்

| தேதி | நேரம் | ஆராதனை | இடம் |
|---|---|---|---|
| 18-03-23 (சனி) | மாலை 7:00 | பரிசுத்த நற்கருணை ஆராதனை | நார்த் டெண்ட் NECK வளாகம், குவைத் சிட்டி |
| 23-03-23 (வியா) | மாலை 7:00 | துதி ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| 24-03-23 (வெள்) | மாலை 3:30 | துதி ஆராதனை | ஜஹ்ரா ஜெப அறை |
| | மாலை 7:00 | ஆண்கள் ஐக்கிய சங்கம் | Parish Hall (Better Books), சால்மியா |
| 25-03-23 (சனி) | மாலை 4:00 | விடுமுறை வேதாகமப் பள்ளி (துவக்க நாள்) | St. John's Parish Hall, அப்பாசியா |
| | மாலை 7:00 | துதி ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| 30-03-23 (வியா) | மாலை 7:00 | துதி பாடல் ஆராதனை | St. John's Parish Hall, அப்பாசியா |
| 31-03-23 (வெள்) | மாலை 3:30 | துதி பாடல் ஆராதனை | ஜஹ்ரா ஜெப அறை |

| | | |
|---|---|---|
| **பாடகர் குழு பயிற்சி** | | |
| குவைத் சிட்டி மெயின் | வெள்ளிக்கிழமைகளில் மாலை 5:00 மணி முதல் 7:00 மணி வரை | சால்மியா Parish Hall (Better Books) |
| அப்பாசியா கிளை | புதன்கிழமைகளில் மாலை 7:00 மணி முதல் 9:00 மணி வரை | St. John's Parish Hall, அப்பாசியா |
| **சிறுவர் வேதாகமப் பள்ளி:** | | |
| குவைத் சிட்டி மெயின் | சனிக்கிழமைகளில் மாலை 5:30 மணி முதல் 6:45 மணி வரை | NECK வளாகம், குவைத் சிட்டி |
| அப்பாசியா கிளை | வியாழக்கிழமைகளில் மாலை 5:30 மணி முதல் 6:45 மணி வரை | St. John's Parish Hall, அப்பாசியா |
| ஜஹ்ரா | வெள்ளிக்கிழமைகளில் மாலை 3:30 மணி முதல் 5:00 மணி வரை | ஜஹ்ரா ஜெப அறை, ஜஹ்ரா |

“நீங்கள் ..... ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்,
அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (ஆகாய் 1:8)



# VISION - 2022

## ARISE & BUILD

**PRAY!** **PARTICIPATE!**

“CSI வேலூர் பேராயத்தில் அரப்பாக்கம் சேகரத்தில்
உள்ள “மஞ்சாலம்” கிராமத்தில்

**ஆலய கட்டுமான பணிகள்**





கர்த்தருடைய பெரிதான கிருபையால், ஆலய கட்டுமான பணி சிறப்புடன் நடைபெற்று வருகிறது. திருச்சபையார் மீதமுள்ள பணிகளுக்காக் ஜெபிக்குமாறும் தாங்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# கவிதைப் பகுதி

## உயிர்ப்பியும் நேசரே!

வலி கொடியது மனதின் வலி கொடியது
உளி வைத்து சிலை செய்வர்
வலி கண்டேன் என் இதயத்தில்
உளி வைத்து செதுக்குவதை போல் ..

மீள வலி இல்லாமல்
கை கொடுக்க ஆள் இல்லாமல் …
விழாமல் விழுந்து எழாமல் எழுந்து
அழாமல் முயன்று தோற்கிறேன்

உன் கட்டளை மீறினேன்
என் கற்பனையில் மாறினேன் …
என் கஷ்டம் போக்க
இஷ்டம் போல வாழ்ந்தேன் …

ஆகாயத்தில் நானும் பறந்தேன்
உம்மை நினைய மறந்து …
இப்போ காப்பார் ஆளின்றி
அந்தரங்கத்தில் நானும் தொங்குறேன் ..

எனை பிடிக்க வீச
வலை இல்லை என்றாலும்
வாசம் போன கிளையாவது
தாங்கள் ஏறி வருகிறேன் …

ஒன்னுக்கு ஆகாத என்னை
புண்ணுக்கு ஆகாத மருந்து
போல எண்ணி தூர வீசினர்
எதற்கு பாரமென தூர வீசினர்

பனிக்கட்டி உருகுகிறதை போல
என் இதயம் உருகுதே ..
காற்றில் கரையும் சூடம் போல
என் இதயம் கறையுதே …

உயிர் உடலை விட்டு
மண்ணில் விழுந்து கிடக்குதே
உயிர்ப்பியும் என்னை உயிர்ப்பியும்
நேசரே என் எபிநேசரே …

*கவிதை எண் : 29*

*கவிப் புனைவு : திரு. ராஜ் திலக்*

# என்னை உயிர்ப்பியும்

- திருமதி. மினி அஜித்




லோகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் திருச்சபை குடும்பத்தாருக்கு அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"என்னை உயிர்ப்பியும்" என்ற தலையங்கத்தின் கீழ் சில சத்தியங்களை வேதத்தின் வாயிலாகப் பார்க்கலாம்.

சங் 119 : 25 (b)-ல் உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்.

சங் 119 : 28-ல் உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்.

சங் 119 : 50-ல் உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது.

சங் 119 : 107 (b)-ல் உமது வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்.

சங் 119 : 116 (a)-ல் நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்.

சங் 119 : 154-ல் உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும் என்று தாவீது பல முறை கூறியிருக்கிறார்.

ஓசியா 5-ம் அதிகாரத்தில் பாவம் செய்த இஸ்ரவேலையும், எப்பிராயீமையும், யூதாவையும் கர்த்தர் கைவிட்ட போது, அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, கர்த்தருடைய முகத்தை தேடினார்கள். கர்த்தரிடமாய் அவர்கள் திரும்பின போது, இரண்டு நாளுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார் என்கிற நம்பிக்கையூட்டும் வார்த்தையை அவர்கள் சொல்கிறதை ஓசியா 6:2-ல் வாசிக்கலாம்.

**கர்த்தர் எவற்றையெல்லாம் உயிப்பிப்பார்?**

**1. சாவுகேதுவான சரீரங்களை, மரணத்திற்கேதுவான வியாதியை, செத்துப் போன அவயவங்களை உயிர்ப்பிப்பார்:-**

ரோமர் 8:11-ல் அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில்

*வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.*

*ஏசாயா 38:1-5, 2 இராஜாக்கள் 20:1-6 வசனங்களில் மரணத்துக்கேதுவான வியாதி கொண்டிருந்த எசேக்கியாவை கர்த்தர் உயிர்ப்பித்து ஆயுசு நாட்களோடு 15 வருஷத்தையும் கூட்டிக் கொடுத்ததைப் பார்க்கலாம்.*

*யோவான் 5:5-9 – ல், பெதஸ்தா குளத்தருகே வியாதியாய் படுத்திருந்த ஒரு சப்பாணியை எழுந்து நடக்க வைத்தார். செத்துப்போன கால்களை மாற்றி பெலனடையச் செய்தார். மாற்கு 3:3-5 – ல், ஜெப ஆலயத்தில் சூம்பின கையையுடைய மனிதனை இயேசு சொஸ்தமாக்கினார். செயலற்ற கையை திறம்பட இயங்க வைத்தார். மாற்கு 7:32-35ல், கொன்ன வாயையுடைய ஒரு செவிடனை இயேசு தொட்டு சுகப்படுத்தின போது அவன் செவிகள் திறக்கப்பட்டு, நாவின் கட்டுகளும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய் பேசினான்.*

*மேற்கூறிய பகுதிகளில் எல்லாம் இயேசு சாவுக்கேதுவான (செத்துப்போன) அவயவங்களை உயிர்ப்பித்து புது வாழ்வைக் கொடுத்ததை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த இயேசு தாமே இன்றும் நம்மோடு இருந்து செத்துப்போன ஒவ்வொரு அவயவங்களையும் உயிர்ப்பிப்பார்.*

***2. செத்துப்போன கர்ப்பங்களை உயிர்ப்பிப்பார்:-***

*ரோமர் 4:19-ல் சாராளுடைய செத்துப் போன கர்ப்பத்தை கர்த்தர் உயிர்ப்பித்து, ஈசாக்கை ஈவாய்க் கொடுத்தார். அந்த ஈசாக்கினிடத்திலிருந்து கிறிஸ்துவின் சந்ததி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எபிரேயர் 11:11-12 வசனங்களும் இதை உறுதி செய்கிறது.*

*1சாமுவேல் 1-ம் அதிகாரத்தில் கர்ப்பம் அடைக்கப்பட்டிருந்த அன்னாள் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினபோது கர்த்தர் சாமுவேல் என்னும் குழந்தையைக் கொடுத்து அவளை ஆசீர்வதித்தார். சாமுவேல் ஒரு சிறந்த தீர்க்கதரிசியாக தாண் முதல் பெயர்செபா மட்டும் அறியப்பட்டிருந்தார். (1 சாமு 3:20).*

*ஆதி 25:21-ல் மலடியாயிருந்த தன் மனைவிக்காக (ரெபேக்காளுக்காக) ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டினபோது ஏசா, யாக்கோபு என்ற இரட்டைக் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.*

*ஆதி 30-ம் அதிகாரத்தில் ராகேலின் செத்துப்போன கர்ப்பத்தை கர்த்தர் உயிப்பித்து யோசேப்பு (ஆதி 30 : 22,24), பென்யமீன் (ஆதி 35:16,18) என்ற பிள்ளைகளைக் கொடுத்தார்.*

*என்னை உயிர்ப்பியும்...*

*நியாயாதிபதிகள் 13-ம் அதிகாரத்தில் மலடியாயிருந்த மனோவாவின் மனைவியின் கர்ப்பத்தை கர்த்தர் உயிப்பித்து, சிம்சோன் என்ற பராக்கிரமசாலியாகிய ஒரு குழந்தையைக் கொடுத்தார்.*

*லூக் 1-ம் அதிகாரத்தில் மலடியாயிருந்த எலிசபெத்தின் கர்ப்பத்தை கர்த்தர் ஆசீர்வதித்து, யோவான் என்ற பிள்ளையைக் கொடுத்தார். இந்த யோவான் ஸ்நானகன் தான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவரும், இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினவரும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*சங் 113:9-ல் மலடியை சந்தோஷமான பிள்ளைத் தாய்ச்சியாக்கி வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறவர் கர்த்தர் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் கலங்கிக் கொண்டிருப்பவர்களை கர்த்தர் சந்தோஷமாக வைப்பார் என்பதில் சந்தேகமில்லை.*

***3. மரித்தவர்களை உயிர்ப்பிப்பார்:-***

*யோவான் 11-ம் அதிகாரத்தில் மரித்து 4- நாள் ஆன லாசருவை இயேசு உயிர்ப்பித்தார்.*

*லூக் 7:11-15-ல், நாயீன் ஊர் விதவையின் மகனை இயேசு உயிர்ப்பித்தார்.*

*மாற்கு 5:23, 35-42-ல், ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகளை இயேசு உயிர்ப்பித்தார்.*

*நமது பாவத்திற்காக மரித்த கிறிஸ்துவை, என்றென்றைக்கும் உயிரோடிருக்கும் படி தேவன் உயிர்ப்பித்தார்.*

***4. விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறவர்களை உயிர்ப்பிப்பார்:-***

*மாற் 9:24-ல் சந்திர ரோகியாயிருந்த ஒரு பிள்ளையின் தகப்பன் தன் அவிசுவாசம் நீங்க உதவி செய்யும் என்று இயேசுவை வேண்டினான். இயேசு அவனை விசுவாசத்தில் பெலப்படுத்தி, அவன் பிள்ளையை சுகப்படுத்தினார்.*

*லூக் 22:31-32-ல் சாத்தான் சீமோனை சோதிக்க கர்த்தரிடத்தில் உத்தரவு கேட்டுக் கொண்ட போது, இயேசு சீமோனின் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு அவனுக்காக வேண்டிக் கொண்டதைப் பார்க்கிறோம்.*

*சீஷர்கள் பலமுறை விசுவாசத்தில் பலவீனப்பட்டபோது இயேசு அவர்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணினார்.*

*மத் 14:28-31-ல், கடலின் மீது நடக்க முயன்ற பேதுரு விசுவாசத்தில் பெலவீனப்பட்டு, கடலில் அமிழ்ந்து போன போது இயேசு அவனைத் தூக்கி விட்டார்.*

மத் 17:20-ல் கடுகு விதையளவு விசுவாசம் நமக்கு இருந்தால் நம்மால் எதையும் செய்ய முடியும் என்பதை இயேசு சுட்டிக் காட்டுகிறார்.

இன்று அனேக மனிதர்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளைப் பார்த்து, வாழ்க்கையில் சம்பவிப்பதைப் பார்த்து நம்பிக்கையிழந்து, விசுவாசம் குன்றி சோர்ந்து போய் விடுகிறார்கள். ஆனால் இயேசுவோ சோர்ந்து போகிறவனுக்கு பெலன் அளித்து, விசுவாசத்தில் அவனை பெலப்படுத்தி நிலைநிறுத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

**5. நொறுங்குண்ட ஆவியை உயிர்ப்பிப்பார் :-**

சங் 143:4 – ல், என் ஆவி என்னில் தியங்குகிறது. என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது.

சங் 143:7-ல் என் ஆவி தொய்ந்து போகிறது.

சங் 142:3-ல் என் ஆவி என்னில் தியங்கும்போது நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்.

மேற்கூறிய வசனத்திலெல்லாம் தாவீது ஆவியில் கலக்கமுற்றவராய் காணப்பட்டார் என்பது தெளிவாக புரிய முடிகிறது.

சங் 143:11-ல் கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும் என்று தாவீது கர்த்தரிடம் மன்றாடுகிறார்.

சங் 147:3-ல் இருதயம் நொறுக்கப்பட்டவர்களை கர்த்தர் குணமாக்குகிறார் என்று தாவீது தனது அனுபவத்தின் மூலம் கூறுகிறார்.

யோபு 32:8-ல் "மனுஷரில் ஒரு ஆவியுண்டு. சர்வ வல்லவரின் சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்" என்று யோபு கூறுகிறார்.

ஏசாயா 57:15-ல் **" நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்"** என்று கர்த்தர் கூறுகிறார்.

இந்த நாட்களிலும் யாராவது இருதயம் நொறுக்கப்பட்ட அனுபவத்தினூடே கடந்து சென்று கொண்டிருந்தால் மனம் கலங்காதிருங்கள்; ஏனென்றால் சங் 51:17-ன் படி நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை கர்த்தர் புறக்கணிக்க மாட்டார். அவர் உங்களைத் தேற்றுவார்.

ஏசாயா 61:1, லூக் 4:18-லும் இயேசுகிறிஸ்து இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் வந்தார் என்பதை தெளிவாக புரிந்து கொள்ளுவோம்.

**6. கலங்குகிற ஆத்துமாவை உயிர்ப்பிப்பார்:-**

சங் 119:28-ல் சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்து போகிறது.

சங் 42:6-ல் என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது.

சங் 88:3-ல் என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது.

சங் 55:4-ல் என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது.

சங் 42:5,11 ; 43:5 வசனங்களில் தனக்குள் கலங்குகிற ஆத்துமாவிடம், என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன் என்று நம்பிக்கையோடே தாவீது கூறுகிறார்.

சங் 94:19-ல் என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.

சங் 116:7-ல் என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு என்று தாவீது கூறுகிறார்.

ஆகவே உள்ளத்தில் வியாகுலங்களோடு இருக்கிறவர்கள் இனி கலங்காதிருங்கள். கர்த்தர் தமது ஆறுதலைத் தந்து உங்கள் உள்ளங்களை அமைதிப்படுத்தி இளைப்பாறுதல் தருவார்.

மத் 26:38-ல் இயேசுவும் மரணத்திற்கேதுவான ஆத்தும வியாகுலங்களை அனுபவித்ததால் அதன் பாடுகளை அவர் நன்கு அறிவார். ஆகவே அவர் கலங்குகிற ஆத்துமாவை நிச்சயமாய் உயிர்ப்பிப்பார்.

சங் 85:6-ல் கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் அவரில் என்றென்றைக்கும் மகிழ்ந்திருக்கும்படி நம்மை உயிர்ப்பிப்பார்.

ஏனென்றால், சங் 19:7 கூறுகிறது, கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.

### *7. அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்துப் போனவர்களை உயிர்ப்பிப்பார்:-*

*ரோமர் 3:23-ல் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தார்கள் என்று பார்க்கிறோம்.*

*ஆதாம் செய்த பாவத்தின் விளைவினால், அவன் சந்ததி பாவக்கட்டுக்குள்ளாய் அடிமைப்பட்டு கிடக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23)*

*பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே 18:4,20)*

*நாம் பெற வேண்டிய தண்டனையை இயேசு தாமே சுமந்து தீர்த்ததால் அவர் பாவியாக்கப்பட்டார். நமக்காக அடிக்கப்பட்டு, அவமானப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு நமக்காக தன்னுயிரையே தியாகம் செய்தார். விளைவு என்ன? சகல மனுக்குலமும் பாவத்தினின்று மீட்கப்பட்டோம்.*

*ஏசாயா 44:22-ல் உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களை கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன். என்னிடத்தில் திரும்பு, உன்னை நான் மீட்டுக் கொண்டேன்.*

*ஏசாயா 38:17-ல் நமது பாவங்களையெல்லம் அவரது முதுக்கு பின்னாக எறிந்து போட்டார்.*

*ஏசாயா 43:25-ல் உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*மீகா 7:19-ல் நம்முடைய பாவங்களையெல்லாம் கர்த்தர் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்.*

*ரோமர் 6:11-ல் அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.*

*ரோமர் 6:6,7-ல் நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ்செய்யாத படிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*

*ரோமர் 6:2-ல் பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்?*

*இந்த லெந்து நாட்களில் நம்மை ஒரு விசை கூட தற்பரிசோதனை செய்வோம். நாம் பாவத்திற்கு அடிமைகளாக்கப் பட்டிருக்கிறோமென்றால் சிலுவையிடமாய் திரும்பி, நம் பாவங்களை அறிக்கையிட்டு, அதை விட்டு விட்டு, நம்மை தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்போம்.*

*ரோமர் 6:22-ல் நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்.*

*எபே 2:1-ல் அக்கிரங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை ( நம்மை) உயிர்ப்பித்தார்.*

***ஆகவே, இந்த லெந்து நாட்களில் நாம் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை கர்த்தரிடம் முழுமையாய் ஒப்புக்கொடுப்போம். அவர் எல்ல தீமையினின்றும், பாவத்திலிருந்தும், அக்கிரமத்திலிருந்தும் நம் ஆவி, ஆத்துமா, சரீரத்தை விடுவித்து (உயிர்ப்பித்து), கிறிஸ்துவோடு கூட உன்னதங்களில் உட்கார வைத்து, நித்திய ஜீவனை நம் அனைவருக்கும் தந்தருளுவாராக.***

*தேவ கிருபையும், அன்பும், சமாதானமும் நம் அனைவரோடும் என்றென்றும் நிலைத்திருப்பதாக. ஆமென்!*

### சோர்ந்து போகாதே!

**ஜெபம் பண்ணுவதில் சோர்ந்து போகாதே!**

**கர்த்தர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே!**

**ஆபத்து காலத்தில் சோர்ந்து போகாதே!**

**நற்கிரியைகளை செய்வதில் சோர்ந்து போகாதே!**

**நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதே!**

**உபத்திரவங்களினால் சோர்ந்து போகாதே!**

**ஊழியத்தில் சோர்ந்து போகாதே!**

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12)**

“வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.” (சங்கீதம் 65:11)




## MARCH BIRTHDAYS (KUWAIT CITY - MAIN)

| Date | M.CODE | Name | | Telephone | Mobile |
|---|---|---|---|---|---|
| 1-Mar | M0045 | Mast. Ebin Shijo Paul Singh | S/O Mr. Thomas Paul Singh | 50985994 | 55549892 |
| 1-Mar | M0087 | Mast. Galvin Deo | S/O Mr. Jinis | 97127288 | |
| 1-Mar | M0098 | Mr. Daniel Bensley, P. | | 55331788 | |
| 1-Mar | M0115 | Mast. Elijah Shaun Franklin | S/O Mr. Franklin Yesuraj | 66998356 | |
| 3-Mar | M0020 | Mast. Joshua Gladwin Johnson | S/O Mr. Johnson G. | 99815983 | 66483607 |
| 4-Mar | M0061 | Mrs. Pushpa Rathi Manova | | 67006651 | 94926751 |
| 4-Mar | M0156 | Mrs. Sheeba Bright Singh | | 99749924 | 97451428 |
| 4-Mar | M0199 | Miss.Angel | D/O Mr.Yesudhas | 50374835 | |
| 5-Mar | M0005 | Mr. Devadoss Daniel, J. | | 97673567 | |
| 6-Mar | M0062 | Mr. Harold Samuel Raja-ratnam | | 97846914 | 99645001 |
| 7-Mar | M0002 | Mrs. Saroja Rosaian | | 97128060 | 99014362 |
| 7-Mar | M0031 | Mr. Kingsley Edwin | | 66893713 | |
| 7-Mar | M0156 | Mr Bright Singh | | 99749924 | 97451428 |
| 7-Mar | M0175 | Mast.Bryan Mohan | S/O. Mr. Raja Mohan | | |
| 10-Mar | M0018 | Mrs. K. Malarkodi | | 99270732 | 99834657 |
| 10-Mar | M0127 | Mrs Prabha Starlin Bibin | | 60300483 | 67626093 |
| 11-Mar | M0178 | Mr.Jerald Seasor | | 96628233 | |
| 12-Mar | M0053 | Mr. Anish Raja Justus | | 99141862 | 51683545 |
| 13-Mar | M0057 | Mr. Belin Issac | | 97718195 | 65631934 |

“வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.” (சங்கீதம் 65:11)




## MARCH BIRTHDAYS (KUWAIT CITY - MAIN)

| Date | M.CODE | Name | | Telephone | Mobile |
|---|---|---|---|---|---|
| 15-Mar | M0111 | Mr. Jerome Kumar | | 55141495 | 55634944 |
| 16-Mar | M0171 | Miss. Nikitah Raj | D/O Mr. Raj Thilak Nallaiyan | 50174087 | |
| 16-Mar | M0173 | Mr.Vivek Suthin Wesley | | 60700537 | 69046646 |
| 17-Mar | M0189 | Mr.Gershon Gambhzran | | 51568128 | |
| 17-Mar | M0203 | Mr.Amesh Jebaraj | | 50855969 | |
| 19-Mar | M0124 | Mrs. Merlin Sheeba, S. | | 60411034 | 99766357 |
| 22-Mar | M0172 | Mr Augustin Soundari Y | | 98728938 | |
| 23-Mar | M0041 | Mrs. Helen Selina Smith | | 66696834 | 66264815 |
| 25-Mar | M0095 | Mr. Jeba Christober | | 60791100 | 65584226 |
| 27-Mar | M0058 | Mast. Chrisphin Leeon Raj | S/O Mr. Gemini Leeon Raj | 97632969 | 99275398 |
| 27-Mar | M0096 | Miss. Miraclin Praisy Catherina | D/O Mr. Manavalan, R. | 97275475 | 94426753 |
| 27-Mar | M0106 | Mr. Eliezer, Jd. | | 60953026 | 60669048 |
| 29-Mar | M0075 | Miss. Daphne Kiruba | D/O Mr. Robert Davidson | 55807076 | 55286120 |
| 30-Mar | M0052 | Miss. Jane Hannah | D/O Mr. Benjamin | 97249715 | |
| 30-Mar | M0121 | Mr. Delbin, G. | | 99560166 | |
| 31-Mar | M0013 | Miss. Benita Kingsley | D/O Mr. Raj Kingsley | 97276297 | |
| 31-Mar | M0034 | Mr. Ajith Davidson | | 66033416 | 94427916 |
| 31-Mar | M0046 | Mr. Martin Jayakanthan J. | | 94009141 | |

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12)

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது." (சங்கீதம் 65:11)




## MARCH BIRTHDAYS (ABBASIYA - BRANCH)

| Date | M.CODE | Name | | Telephone | Mobile |
|---|---|---|---|---|---|
| 13-Mar | A0065 | Mrs.Gladis | | 99210150 | 51354989 |
| 14-Mar | A0044 | Mr Jeba Singh Raj T | | 65749212 | 69638772 |
| 23-Mar | A0061 | Mr.Melvin Prem Deva Singh | | 69903729 | |
| 26-Mar | A0002 | Mast. Kevin Richard | S/O Mr. Jeyasingh David Raj | 65588073 | 66535467 |
| 27-Mar | A0017 | Mrs. Gilda Rani Vijil Doss | | 65100756 | 99894177 |
| 29-Mar | A0066 | Mr.Sujin | | 96783085 | |
| 31-Mar | A0002 | Mrs. Mabel Arputha Jaya-singh | | 65588073 | 66535467 |
| 31-Mar | A0033 | Mr. Johnson J | | 60048904 | |
| 31-Mar | A0037 | Mrs. Jayanthi Shylin | | 60954786 | 66413133 |

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்." (சங்கீதம் 34:8)




## MARCH WEDDING ANNIVERSARIES (ABBASIYA - BRANCH)

| Date | M.CODE | Name | | Telephone | Mobile |
|---|---|---|---|---|---|
| 7-Mar | A0001 | Mr. Simson Enose | Mrs. Jermeena Sim-son | 66524840 | 66423541 |

# வேதாகம வினா–விடை

## எஸ்றா (Ezra)

1. எஸ்றாவின் தகப்பன் யார்?

Who was Ezra's Father?

2.முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெர்சிய இராஜா யார்?

W ho is the king of Persia in chapter one of Ezra?

3. அதிக புத்திரர் திரும்பி வந்தது, எந்தப் பட்டணத்திற்கு, பெத்லகேமிற்கா? எரிகோவிற்கா?

Were there more children going into Bethlehem or Jericho?

4. எந்த வயதுக்கு மேற்பட்ட லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைத்தார்கள்?

What was the youngest age of people working on building the temple ?

5. சிம்சாயியின் பணி என்ன?

What was Shimshai's job?

6. இஸ்ரவேலர் எருசலேமிற்கு திரும்பி வந்த “இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதத்திலே” என்ன நடந்தது?

What happened in "the second month of the second year of their coming to ... Jerusalem"

7. ஒபதியாவின் தகப்பன் யார்?

Who was Obadiah's father?

8. ஆசாரிய புத்திரரில் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டவர்கள், இவர்கள் தங்கள் ஸ்திரீகளைத் தள்ளிவிடுவோம் என்று கையடித்துக்கொடுத்து; தாங்கள் குற்றவாளிகளானபடியினால் என்ன பலி செலுத்தினார்கள்?

The priest who had married heathen wives to divorce and acknowledge their guilt by offering what?

9. யூதாவின் சிறையிருப்பை முன்னறிவித்த தீர்க்கதரிசி யார்?

Who prophesied that the Jews captivity?

10. சிற்பாசாரிகள் கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம்போடுகிறபோது, ஆசாரியர்கள் என்ன செய்தார்கள்?

When the builders completed the foundation of the Temple, what did the priest do?

*Prepared by :- Mrs. Sophia Jeyakumar*

**சரியான விடைகளை அனுப்ப வேண்டிய மொபைல் எண் 6669 6834 (திரு.ஸ்மித்)**

**கடைசி தேதி 28-03-23**

**<u>பிப்ரவரி மாதத்திற்கான விடைகள்</u>**

1. ஆபி Abi (18:2)
2. ஏசாயா Isaiah (19:2)
3. சனகெரிப் King Sennacherib (19:36)
4. பெரோதாக்பலாதான் என்னும் பாபிலோனின் ராஜா Berodachbaladan, the son of Baladan, king of Babylon (20:12)
5. மேடைகளையும், பாகாலுக்குப் பலிபீடங்களையும் High places & The temple of Baal (21:3)
6. 8 (22:1)
7. நியாயப்பிரமாண புஸ்தகம் The book of the law (22:8)
8. கீதரோன் ஆற்று ஓரத்திலே brook Kidron (23:6)
9. எகிப்திலே In Egypt (23:34)
10. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் Nebuchadnezzar king of Babylon (24:1)




***<u>சரியான விடைகள் எழுதியவர்கள்:-</u>***

***Mrs. Monisha Darbin***

***Mr. Yesudhas***

***Mrs. Minni Johnson***


***Mrs. Bright Annabell Vivek***

***Mrs. Saroja Rosaian***

***Mrs. Girija Cyril***

# KIDS CORNER

*Bible Cross word*



**ACROSS**

1 He was the first king of Israel

5 She was a queen who saved her people from the wicked man Haman

8 He built the Ark

9 He had a coat of many colors

11 She was the wife of Abraham

14 He killed the giant Goliath with a slingshot

16 He was the first man

17 He was known as a wise king

18 He led his people out of slavery in Egypt

**DOWN**

2 He escaped the fires of Sodom

3 He won the battle for Jericho by blowing horns

4 He was swallowed by a giant fish

6 This prophet was taken up to heaven in a whirlwind

7 She was the first woman

10 The Queen of ___ visited Solomon

12 He was the father of Isaac

13 He was very strong

15 He was thrown in a lions' den but survived

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12)

# KIDS CORNER

*Bible Word Search*

## *Spiritual Gifts*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| E | L | T | S | O | P | A | D |
| R | H | E | L | P | S | I | W |
| O | E | H | S | Y | S | F | I |
| T | A | P | C | C | E | A | S |
| S | L | O | E | R | R | I | D |
| A | I | R | V | E | U | T | O |
| P | N | P | I | M | N | H | M |
| G | G | I | V | I | N | G | C |

*All the words listed below are in the puzzle - left, right, up, down or diagonally. Find each word and highlight it. After you have found all the words, write the leftover letters in the correct order to form the **mystery answer**.*

Apostle, Church, Discern, Faith, Giving, Healing, Helps, Mercy, Pastor, Prophet, Wisdom

---

***Send your answers & coloring pages to***
***Mr. Smith, Mobile # 66696834 before 28-03-23***

---

**February Month Answer**

# DEVIL


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| D | E | W | T | E | M | P | T |
| T | M | O | D | G | N | I | K |
| I | V | B | R | E | A | D | I |
| R | O | D | N | E | L | P | S |
| I | L | O | F | O | R | T | Y |
| P | T | A | M | O | U | T | H |
| S | S | T | E | M | P | L | E |
| T | P | I | H | S | R | O | W |




Mast. K. Sam Solomon Raj
Miss. K. Angeline Gloria
Mast. Marvin Madhanlal
Mast. Arwin Madhanlal
Mast. Aston Jonah Hildon
Miss. Sheryl Rebecca Pearl
Mast. Rhenius Sathyan
Miss. Jazlyn Helena Johnson
Mast. Lawton Joshua Hildon

# KIDS CORNER

*Coloring Page*




**Memory Verse:**

Fruit of the Spirit is love, joy, peace, longsuffering, gentleness, goodness, faith, Meekness, temperance: (Galatians 5:22,23)

# PHOTO GALLARY

*CHUCH PICNIC ON 24-02-2023*









*CBS RETREAT ON 26-02-2023*





## Promise Verse - 2023

Rejoicing in hope; patient in tribulation; continuing instant in prayer; (Romans 12:12)

# KIDS CORNER


*"Temptation"*
*Coloring Page - Feb'23*




K. Sam Solomon Raj




Miss. K. Angeline Gloria




Mast. Marvin Mathanlal




Mast. Arwin Mathanlal





Mast. Aston Jonah




Miss. Sheryl Rebecca




Mast. Rhenius Sathyan




Miss. Jazlyn Helena




Mast. Lawton Joshua




Miss. Brithina Wesly

# 11th




Bible Lessons

Songs

Crafts

Games

Snacks




NECK Campus
Kuwait City

25th March
to
1st April
4pm - 6:30pm

**Led by :- Rev. A. Jeba Dhas**



Transport available

REGISTER NOW!

| Co-Ordinator | Director | Registration |
|---|---|---|
| Mr. Pradhap - 6624 5375 | Mr. Smith - 6669 6834 | Mr. Anish - 9914 1862 |


Editor - Rev. A. Jeba Dhas
Co-Ordinator - Mr. R. Prathab Raja Sekar
Publisher - Mr. M. Joseph Jebakumar

For Prayer Request
Rev. A. Jeba Dhas
Mobile - 66162954

Visit us on www.kuwaittamilcsi.com

PUBLISHED ON BEHALF OF EXECUTIVE COMMITTEE